# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE,

# FAST TRACK COURT, ARANI.

# S.C.No.56/2020

| | | |
|---|---|---|
| **Deposition of Witness for** | **:** | **P.W.4** |
| **Name** | **:** | **திரு.வள்ளிக்கண்ணன்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 12.10.2022.**

**முதல் விசாரணை -**

**நான் எட்டிவாடி கிராமத்தில் வசிக்கிறேன். பயிர் வேலை செய்து வருகிறேன். இறந்த கண்ணன் என்னுடைய அண்ணன். ஆஜர் எதிரியை தெரியும். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். 15.6.2019அன்று இரவு 8.30 மணிக்கு என் அண்ணன் கண்ணனிடம் ஏர் ஓட்டும் டில்லர் மிஷினை கேட்பதற்காக சென்றபோது, எதிரி என் அண்ணன் கண்ணனை பார்த்து ரயில்வே பணி புரிபவர்கள் சிறுநீர் கழித்தது சம்பந்தமாக கேட்டுக்கொண்டு இருந்தார். இதை குறித்து**

**கேட்பதற்காக என் அண்ணனும் அவருடைய மகனும் சென்றார்கள். எதிரி என் அண்ணன் மகன் சாமியை தேக்கு கொம்பால் அடித்துவிட்டார். நான் அதை பார்த்துவிட்டு ஓடி சென்றேன்.**

**அப்போது எதிரி என் அண்ணனை தேக்கு கொம்பால் இடது மார்பில் வடக்கு பார்த்தாற்மாறி என் அண்ணன் நின்றிருந்தவரை குத்தி பிடுங்கிவிட்டார். நான் கிட்டதட்ட பத்து அடி தூரத்திற்கு சென்றுவிட்டேன். வெளிச்சம் எல்லாம் கிடையாது. நிலா வெளிச்சம் தான். நன்றாக தெரிந்தது. போய் ஆளை பார்த்தால் சாய்ந்து படுத்து இருந்தார். என் அண்ணன் அவருடைய நிலத்திலேயே படுத்து இருந்தார். குத்தி கீழே தள்ளியதில் படுத்து கிடந்தார். நான் போய் தூக்கி அண்ணா அண்ணா என்று கத்தி கதறினேன். அதில் என் ஆடை எல்லாம் ரத்தமாகியது. அதற்குள் எதிரி ஓடிவிட்டார்.**

**சாமி தலையில் ரத்தம் வந்தது. சாமியை சேகர் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார். இதுசம்பந்தமாக யார் போலிசில் கேஸ் கொடுத்தது என்றால் நான் தான் களம்பூர் காவல்நிலையம் சென்று கேஸ் கொடுத்தேன். சம்பவம் நடந்த அரைமணி நேரத்திற்கெல்லாம் போலிசார் வந்துவிட்டார்கள். வந்து என் அண்ணனை ஆம்புலன்சில் ஏற்றிவிட்டார்கள். என் அண்ணனை ஆரணி மருத்துவமனைக்கு அழைத்து வந்துவிட்டார்கள். போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தபோது என்னை களம்பூர் காவல்நிலையம் வரச்சொன்னார்கள். நான் களம்பூர் காவல்நிலையம் சென்றேன்.**

**சம்பவத்தை பார்க்க மேற்கில் இருந்து சேகர் வந்துவிட்டார். நானும் சென்றுவிட்டேன். சாமி மருத்துவமனைக்கு சென்று உடனே வந்துவிட்டார்.**

அவர் வந்தபிறகு நான், சாமி, சேகர், ரமேஷ் மற்றும் பழனி காவல்நிலையம் சென்றோம். என் அண்ணனின் பிரேதத்தை ஆரணியில் வேலை ஆகாது என்பதால் வேலூர் எடுத்துச் சென்றுவிட்டார்கள். வேலூரில் இருந்து வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். எதிரி பயன்படுத்திய பொருளை பார்த்தால் அடையாளம் காட்ட முடியும். பெரிய தேக்கு கொம்பால் சாமியை அடித்தார். சின்ன தேக்கு கொம்பால் என் அண்ணனை குத்திவிட்டார். இந்த வழக்கு சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

என்னுடைய வீடு எட்டிவாடி ஊருக்குள் உள்ளது என்றால் சரி தான். என் அண்ணனுக்கு எட்டிவாடி கிராமத்தில் ஒரு வீடு உள்ளது என்றால் சரி தான். தஞ்சியம்மாள் கோயிலுக்கு போகும் ரோட்டில் என் அண்ணனுக்கு வீடு உள்ளது என்றால் வடக்கு பக்கத்தில் வீடு உள்ளது. எட்டிவாடி கிராமத்தில் இருந்து தஞ்சியம்மாள் கோயில் போகும் ரோட்டில் உள்ள வீட்டிற்கு சுமார் நான்கு கிலோமீட்டர் தொலைவு என்றால் 3 கிலோமீட்டர் தொலைவு தான் இருக்கும். டில்லர் மிஷின் வாங்குவது சம்பந்தமாக என் அண்ணனை பார்க்க வந்தது குறித்து போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரி தான்.

சேகர் வீடு என் அண்ணன் வீட்டில் இருந்து எவ்வளவு தொலைவு என்றால் ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது. சத்தம் போட்டாலே கேட்கும் தொலைவில் உள்ளது. என் அண்ணன் அவருடைய நிலத்தை ரயில்வே பொருட்களை போட்டு வைப்பதற்காகவும், போக்குவரத்து பாதைக்காகவும் வாடகை விட்டிருந்தார் என்றால் சரி தான்.

ரயில்வே பிரிட்ஜ் கட்டுவதற்காக ஒப்பந்த பணியாளர்கள் நிறைய பேர் வந்தார்கள் என்றால் அப்போதைக்கு ஐந்து பேர் தான் கம்பி கட்டுவதற்காக வந்தார்கள்.

சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் அரைமணி நேரம் நடந்தது. என் அண்ணன் வடக்கு பார்த்தாற் மாறி நின்றுக்கொண்டு இருந்தபோது எதிரி இடது மார்பில் குத்தி பிடுங்கினார் என்று போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். நிலா ஒளியில் பத்து அடி தூரத்தில் சம்பவத்தை பார்த்ததாக போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் அண்ணன் சாய்ந்த நிலையில் படுத்து இருந்தார் என்ற விவரத்தை போலிசார் என்னை விசாரணை செய்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன்.

நான் போய் என் அண்ணனை தூக்கினேன், எனது ஆடை ரத்தமாகிவிட்டது என்பதை போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என் ஆடை ரத்தமானதை பார்த்தார்கள். ஆரணியில் வேலையாகாது வேலூர் அழைத்து சென்ற விவரத்தை போலிசார் விசாரணையில் சொன்னேனா என்றால் போலிசாரும் ஆரணியில் இருந்து வேலூருக்கு வந்தார்கள்.

வேலூர் அடுக்கம்பாறை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது நான் உடன் சென்றேன் என்றால் சரி தான். என் அண்ணனை அடுக்கம்பாறை மருத்துவமனையில் காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள். டாக்டர் என் அண்ணன் இறந்துவிட்டார் என்று சொன்னார்கள் என்றால் ஆரணி மருத்துவமனையிலேயே சொல்லிவிட்டார்கள். என் அண்ணனை மறுநாள் 12

மணிக்கு வேலூர் மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தார்கள். வேலூர் மருத்துவமனையில் இருந்து எப்போது வீட்டிற்கு வந்தது என்றால் மாலை 4 மணிக்கெல்லாம் வந்தது.

காவல்நிலையத்திற்கு எங்களுடன் ரமேஷ், பழனி வந்தது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தபோது சொன்னேனா என்றால் சொன்னேன். எனக்கு அண்ணன் வீட்டில் தகராறு நடக்கிறது என்று யார் சொன்னார்கள் என்றால் நானே தான் போனேன். மாலை 6.30 மணிக்கு மேல் சென்றிருப்பேன். என் அண்ணனிடம் ஒரு அரை மணி நேரம் பேசியிருப்பேன். ரத்த கறை படிந்த என்னுடைய ஆடையை போலிசாரிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வேலூர் திருவண்ணாமலை ரோட்டில் கோயிலுக்கான வளைவு ஒன்று உள்ளது என்றால் சரி தான். மேற்படி வளைவிற்கு இடது பக்கம் வறட்டு குட்டை ஒன்று உள்ளது என்றால் சரி தான்.

பழனி, ரமேஷ் அவர்களின் நிலம் வறட்டு குட்டைக்கு கீழ்புறம் உள்ளது என்றால் அவர்களுக்கு நிலமே கிடையாது. வறட்டு குட்டையை அடுத்து தான் எதிரியின் நிலம் உள்ளது என்றால் சரி தான். ரயில்வே ரோட்டிற்கும் எதிரியின் வீட்டிற்கும் இடையில் சுமார் 50 அடி இருக்கும் என்றால் 100 அடி இருக்கும். என் அண்ணன் நிலத்திற்கு அடுத்து எதிரியின் நிலம் என்றால் ஒரே வரப்பு தான்.

எதிரி வீட்டில் 10,15 மாடுகள் இருக்கும் என்றால் 4,5 மாடுகள் தான் இருக்கும். என் அண்ணன் நிலத்திற்கும் எதிரி வீட்டிற்கும் இடையில் தான் மாடுகள் கட்டி வைத்திருந்தார் என்றால் வைக்கோல் போடும் இடம் 10 அடி தூரத்தில் உள்ளது. மாடு கட்டும் இடம் 100 அடி தூரத்தில் உள்ளது.

பன்னீர், ரமேஷ், பழனி என்பவர்களின் வீடுகள் ரயில்வே ரோட்டிற்கு மேற்கில் உள்ளது என்றால் சரி தான். மேற்படியார்களின் வீடு என் அண்ணன் நிலத்தில் இருந்து ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரி தான். என் அண்ணன் மகனை சேகர் காரில் வைத்து அழைத்துச் சென்றார் என்றால் சரி தான். நான் அவர்கள் உடன் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரி தான்.

அரைமணி நேரத்தில் போலிசார் பெரிய அதிகாரிகள் உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் எல்லாம் ஜீப்பில் தான் சுமார் 10 பேர் வந்தார்கள் என்றால் சரி தான். போலிசார் வந்தவுடனேயே ஐந்து நிமிடத்தில் சாமியும் சேகரும் வந்துவிட்டார்களா என்றால் வந்துவிட்டார்கள். போலிசார் சம்பவ இடத்தில் ஒரு மணி நேரம் இருந்திருப்பார்களா என்றால் இருந்திருப்பார்கள். அந்த ஒரு மணி நேரமும் போலிசார் சம்பவம் சம்பந்தமாக அங்கிருந்தவர்களை விசாரணை செய்தார்கள் என்றால் சரி தான். போலிசார் அவர்கள் சொன்னதை எல்லாம் எழுதிக்கொண்டார்களா என்றால் எழுதிக்கொண்டார்கள். போலிசார் எழுதியதற்கு என்னிடமும், அ.சா.1,2னிடமும் கையொப்பம் பெற்றார்கள் என்றால் அந்த நிலையில் எனக்கு ஞாபகம் இல்லை.

ரயில்வே ரோட்டிற்கு பிறகு ஒப்பந்த ஊழியர்கள் தங்குவதற்கு ஒரு கூடாரமும் பொருட்கள் வைக்க கன்டெய்னரும் இருந்தது என்றால் சரி தான். அய்யப்பன் என்பவரும் என் அண்ணனும் கான்ட்ராக்டரிடம் வேலை பார்த்தார்கள் என்றால் சரி தான். சாட்சி தானாகவே அந்த நேரம் அய்யப்பன் சாப்பிட சென்றுவிட்டார் என்று சாட்சியம் அளிக்கிறார். போலிசார் வரும்போது தகவல் கேள்விப்பட்டு அந்த பகுதியில் வசிக்கும் சுமார் 50,100

பேர் வந்துவிட்டார்கள் என்றால் சரி தான். போலிசார் ஒப்பந்த பணியார்கள் ஐந்து பேரையும் விசாரித்தார்கள் என்றால் விசாரிக்கவில்லை. அந்த இடத்தில் அவர்கள் இல்லை.

நான் அன்றைய தினம் என் அண்ணனை பவர் டில்லர் வாங்க பார்க்க வரவில்லையென்றாலும், முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த சம்பவமும் நடைபெறவில்லையென்றாலும், எதிரி யாரையும் தாக்கவில்லையென்றாலும் சரியல்ல. எதிரியின் மனைவி பெயர் பவானி. பவானிக்கு தலை உடம்பில் எல்லாம் காயமாகியிருந்தது என்றால் அவ்வளவு காயம் இல்லை. பவானிக்கு யார் அடித்து அவருக்கு காயமானது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது. எதிரிக்கும் பவானிக்கும் ஏற்பட்ட காயம் சம்பந்தமாக அவர்கள் புகார் கொடுத்து களம்பூர் காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டிருந்தது என்றால் அதை பற்றி எனக்கு தெரியாது.

எதிரியையும் பவானியையும் என் அண்ணனும் சாமியும் அடித்தார்கள் என்றாலும், அந்த நேரத்தில் அக்கம்பக்கம் இருந்தவர்களும் பணியில் இருந்தவர்களும் தடுத்து விலக்கிவிட்டர்கள் என்றால் சரியல்ல. அங்கு போனவுடனே சம்பவம் நடந்ததுவிட்டது. பிறகு எப்படி இவர்கள் எல்லாம் தடுப்பார்கள். அவ்வாறு தடுத்து விலக்கிவிடும்போது தான் என் அண்ணனுக்கும் சாமிக்கும் காயங்களானது என்றால் நான் தான் சம்பவத்தை நேரடியாகவே பார்த்தேனே. நான் சொல்வது போல் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும், இறந்தவர் என் அண்ணன் என்பதால் சம்பவத்தை குறித்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தஞ்சியப்பனுக்கு வறட்டு குட்டை வழியாக வழி பாதை உண்டு என்றால் இல்லை.

பொது வழியாக விட்ட இடத்தில் தஞ்சியப்பன் சென்றதால் என் அண்ணனும் சாமியும் சென்று தஞ்சியப்பன் வீட்டில் தகராறு செய்து அடித்தார்கள் என்றால் அவர்கள் எல்லாம் போகவில்லை. போலிசார் சொல்லிக்கொடுத்து சான்று பொருட்களை அடையாளம் காட்டினேன் என்றால் நான் சொல்லிக்கொடுத்து சொல்லவேண்டிய அவசியம் இல்லை. நானே நேரில் பார்த்தேன். எதிரி சான்று பொருட்களை வைத்து சாமியையும் என் அண்ணனையும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. நான் தான் கண்ணால் பார்த்தேனே. இறந்தவர் என் அண்ணன் என்பதால் போலிசார் எழுதிய பொய் வழக்கிற்காக சொல்லிக்கொடுத்தாற்போல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd/-K.Vijaya.
Additional Sessions Judge,
Arani.